செய்தி வெளியீடு எண் : 1440 நாள் : 20.07.2023

## செய்தி வெளியீடு

## தமிழ்நாட்டில் குறுவை சாகுபடியை தடையின்றி மேற்கொள்ள காவிரியிலிருந்து உரிய நீரினைத் திறந்துவிட உத்தரவிடுமாறு கோரி மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தித் துறை அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம்

காவிரியில் தமிழ்நாட்டிற்கு உரிய தண்ணீரை கர்நாடகம் திறந்துவிடாததால், தமிழ்நாட்டில் தற்போது குறுவை சாகுபடிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்தும், உடனடியாக காவிரியிலிருந்து உரிய நீரினை திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று கோரியும், மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் செகாவத் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 19-7-2023 அன்று எழுதியிருந்த கடிதத்தை, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தித் துறை அமைச்சர் அவர்களை இன்று (20-7-2023) புதுதில்லியில் நேரில் சந்தித்து வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், காவிரி டெல்டா விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி முக்கியமாக உள்ள நிலையில், இந்த ஆண்டு குறுவை சாகுபடியை விவசாயிகள் உரிய நேரத்தில் மேற்கொள்ள ஏதுவாக, மேட்டூர் அணை கடந்த ஜூன் 12-ம் தேதி திறக்கப்பட்டது என்றும், 2018 பிப்ரவரி 16 ஆம் நாளிட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில், நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர அட்டவணையின்படி, நீர் சேமிப்பு மற்றும் பிலிகுண்டுலுவில் அடையப்பட வேண்டிய நீரோட்டத்தைக் கருத்தில் கொண்டு இது செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், ஜூன் 1 முதல் ஜூலை 17 வரை பிலிகுண்டுலுவில் பெறப்பட்ட நீர் இருப்பு 3.78 டி.எம்.சி மட்டுமே என்றும், இந்தக் காலகட்டத்தில் பெறவேண்டிய தண்ணீர் அளவு 26.32 டி.எம்.சி. என உள்ள நிலையில், 22.54 டி.எம்.சி., நீர் பற்றாக்குறையாக உள்ளது என்றும் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பிலிகுண்டுலுவில் இந்த 3.78 டி.எம்.சி நீர் வரத்துகூட கே.ஆர்.எஸ் மற்றும் கபினி நீர்த்தேக்கங்களுக்கு கீழே, கட்டுப்பாடற்ற இடைநிலை நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து பிலிகுண்டுலு வரை பாய்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தென்மேற்கு பருவமழை துவங்குவதில் தாமதம் ஏற்பட்டாலும், ஜூலை மாதத்தில் மழை வேகமெடுத்துள்ள நிலையில், 2 அணைகளில் இருந்தும் கர்நாடகம் தண்ணீர் திறந்து விடவில்லை என்றும், இதனால், மேட்டூர் அணையில் நீர் இருப்பு வேகமாகக் குறைந்து வருகிறது என்றும், தற்போதைய நீர் இருப்பு, 20 நாட்கள் மட்டுமே பாசனத்திற்குப் பயன்படும் என்றும் தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவ மழை குறைவாக இருப்பதால், குறுவை சாகுபடி, மேட்டூர் அணையில் இருந்து வரும் நீரை மட்டுமே நம்பியுள்ளதாகவும், குறுவை சாகுபடிக்காக மேட்டூரில் இருந்து ஆரம்பத்தில் வினாடிக்கு 12,000 கன அடி நீர் திறக்கப்பட்ட நிலையில், தற்போது அது 10,000 கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, நியாயமான நீர் மேலாண்மை மூலம் நெருக்கடியைச் சமாளிக்க அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு எடுத்து வருவதாகவும், தண்ணீர் தேவைக்கும், நீர்வரத்திற்கும் உள்ள இடைவெளி மிகவும் அதிகமாக இருப்பதால், கர்நாடகாவில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீரைக் கொண்டுதான் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்திட இயலும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 5-7-2023 அன்று மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, இந்த முக்கியமான பிரச்சினையில் தலையிட்டு, தண்ணீர்ப் பற்றாக்குறையை ஈடுசெய்ய கர்நாடகத்திற்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொண்டதை தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 3-7-2023 தேதியிட்ட கடிதத்தின்படி, காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டங்களிலும் இந்தப் பிரச்சினையை தமிழ்நாடு அரசின் சார்பில் எடுத்துச் சென்றதாகவும், காவிரி நீர் மேலாண்மை ஆணையம், 4-7-2023 தேதியிட்ட தனது கடிதத்தில், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் திருத்தப்பட்ட, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பின்படி பிலிகுண்டுலுவில் நீரோட்டத்தினை உறுதி செய்யுமாறு கர்நாடகாவுக்கு அறிவுறுத்தியிருந்த நிலையிலும், கர்நாடக அரசு, மாண்புமிகு உச்சநீதிமன்றம் பரிந்துரைத்த மாதாந்திர அட்டவணையைப் பின்பற்ற எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கடினமான சூழ்நிலையில், கர்நாடகா உடனடியாக தண்ணீர் திறந்து விட்டால் மட்டுமே, தமிழ்நாட்டில் குறுவைப் பயிரைக் காப்பாற்ற முடியும் என்பதால், இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள மாதாந்திர அட்டவணையைப் பின்பற்றவும், பற்றாக்குறையை ஈடுசெய்யவும் கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் வழங்கிட உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

- - - - - -

**Text of the D.O. Letter of the Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru M.K. Stalin dated 19-7-2023 addressed to the Hon'ble Union Minister of Jal Shakti, Thiru. Gajendra Singh Shekhawat, requesting to release the Cauvery water:**

I would like to bring to your urgent attention the risks faced by the current Kuruvai crop in Tamil Nadu, due to Karnataka not releasing our due share of Cauvery waters and request your immediate intervention to save it. The Kuruvai is a crucial crop for the farmers of Cauvery delta. To facilitate the cultivation of Kuruvai crop on time, the Mettur reservoir was opened this year on 12th June. This was done considering the carryover storage and the flows to be realized at Billigundulu, as per the monthly schedule fixed based on the Judgment of the Hon'ble Supreme Court dated 16th February 2018. However, the flows received at Billigundulu, from 1st June to 17th July, is 3.78 TMC only, as against the prescribed quantum of 26.32 TMC for this period. This leaves a huge shortfall of 22.54 TMC. Even this meager flow of 3.78 TMC realized at Billigundulu is from the flows from the uncontrolled intermediate catchment areas below the KRS and Kabini reservoirs up to Billigundulu.

Though the onset of South West monsoon was delayed, it has picked up pace in July. However, Karnataka has not released any water to us from the two scheduled reservoirs. As a result, the storage in Mettur reservoir is dwindling fast and the current storage can sustain irrigation only for about 20 days. Since South West monsoon rainfall in Tamil Nadu is less, the Kuruvai crop depends only on flows from Mettur

reservoir, which in turn depends on releases from Karnataka. Although 12,000 cusecs of water was released from Mettur initially, as needed per day for the Kuruvai crop, it has been brought down to 10,000 cusecs now. Thus, we have been taking all efforts to manage the crisis with judicious water management. But the demand – supply gap is very significant and it can be met only by releases from Karnataka.

Our Hon'ble Minister for Water Resources had sought your intervention on this vital issue during his meeting with you on 05.07.2023 and requested you to instruct Karnataka to make good the shortfall. We had also taken up this issue already with the Cauvery Water Regulation Committee in its meetings as well as with the Cauvery Water Management Authority, vide our letter dated 03.07.2023. The Authority, in its letter dated 04.07.2023, advised Karnataka to ensure the flows at Billigundulu as per the Final Award of the CWDT as modified by the Hon'ble Supreme Court. Even after the Authority's above mentioned intervention, Karnataka has not made any effort to adhere to the monthly schedule prescribed by the Hon'ble Supreme Court.

In this critical scenario, the standing Kuruvai crop can be saved only if Karnataka releases water immediately. I, therefore, urge your personal and immediate intervention on this issue and request you to direct the CWMA to issue directions to Karnataka to abide by the monthly schedule prescribed by the Hon'ble Supreme Court and also make good the shortfall.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in